# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :26 April 2025
கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005,
Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR SENTHIL PRAKASH.S**
Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**
Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**
Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**
Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின்
பிற உரை நுட்பங்கள்
முனைவர்.வி.சேகர்

தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில் பாட வேறுபாடுகள்
கு.செந்தமிழ்செல்வி

எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்
ஆ.கவிதா

சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு
மா.மகேஸ்வரி

சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு
ப. நந்தினி

களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்
திருமதி.கோ.சரண்யா

புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணா ்த்தும் போர்
ப.சிவாஜி

பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்
இரா.தீபலெட்சுமி

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி
இரா.ஹேமலதா

சிலம்பில் அரசியல்
மு.உமாமகேஸ்வரி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்**
**முனைவர் ச.வைத்தீஸ்வரன்**

**திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்**
**முனைவர் ஹ.விஜயலட்சுமி**

**பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்**
**ப.பிரபு**

**திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்**
**சா.ஜனார்த்தனன்**

**சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்**
**திருமதி நா.நித்யா**

**நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்**
**கி. ராஜ்குமார்**

**தர்காவும் விளிம்புநிலை மக்களும்**
**முனைவர் மௌ.அஸ்கர் அலி**

**இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்**
**முனைவர் நா. ஜிதேந்திரன்**

**சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு**
**ரா.சந்தியா**

**ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'**
**ரா.ஹேமா சிவகா**

**கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்**
**இரா.கலாவதி**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

நன்றி

# அகத்தினுள்

இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்
ந.மஞ்சுளா

மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்
பத்மினி. S

EASY LEARNING TECHNIQUES
PROF. Dr. Er. S. HARI PRASAD

Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools
Kanapathipillai Gnanaretnam

A Comparative Study Of Formal And Non-formal Education Systems
Shiyani Thevaruban

நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2

நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு

The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu
P.PRAVEENKUMAR

Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums
Dr. S.Udhaya Kumar.

தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்
முனைவர் செ. சாந்தி

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்

*The domestic virtues of Thirumula Nayanar*

**முனைவர் ஹ.விஜயலட்சுமி,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
கம்பன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவண்ணாமலை.

**ஆய்வுச்சுருக்கம்:**

சைவ சமயத்தைப் பரப்பிய அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவர் திருமூலர். சைவத்திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாம் திருமுறையான திருமந்திரத்தை எழுதியவர். திருமந்திரத்தில் சராசரி மனிதனும் தம் வாழ்வில் எப்படி சிறப்புற்று வாழ வேண்டும். அவன் வாழ்வில் அறங்களை எவ்வாறு செய்ய வேண்டும். தன் இல்லற வாழ்வில் அறத்தினை கடைப்பிடித்து நல்வழியில் பிறவிப் பயனை அடைய வேண்டும் என்றும், அறத்தினால் அவன் வாழ்வில் ஏற்படும் நன்மைகளையும் திறம்பட திருமந்திரத்தில் திருமூலர் கூறியுள்ளார். திருமூலர் கூறியுள்ள இல்லற அறங்களை ஆராயும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

***Research Summary:***

*Thirumoolar was one of the sixty-three Nayanmars who spread the Saivism religion. He wrote the Thirumanthiram, the tenth of the twelve Saiva Tirumurais. In the Thirumanthiram, the average person should also live a special life. He How to practice virtue in life. Practice virtue in your family life. He should practice virtue and attain the benefits of rebirth in a good way. Thirumoolar has also effectively mentioned the benefits of life in the Thirumantaram. Thirumoolar This research article is designed to examine the aforementioned household virtues.*

***Keywords:***

*Parakayapravesam, Pranayama,chithargal, Dharana,aram,thirumoolar*

**திறவுச் சொற்கள்:**

பரகாயப்பிரவேசம், பிராணாயாமம்,சித்தர்கள்,தாரணை,அறம், திருமூலர்

**முன்னுரை:**

இல்லறம் என்பதே உயர்ந்த அறம். அதனை ஒருவன் வெற்றி கொள்வது அனைத்தையும் காட்டிலும் மேலானது என்பார் திருமூலர். வாழ்வின் உண்மைகளை விளக்கி பிறவியை பெருமைப்படுத்த விரும்பியவர் திருமூலர். உடலில் உள்ள உயிரின் இயல்பையும், வாழ்வையும் விளக்கும் நூலாக திருமந்திரம் உள்ளது. திருமந்திரத்தில் திருமூலர் கூறியுள்ள இல்லற அறங்கள் பற்றி இவ்வாய்வு ஆராய்கின்றது.

**திருமூலர் வரலாறு:**

திருமூலர் வாழ்க்கை வரலாறு பற்றி கூறும் நூல் சேக்கிழார் எழுதிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம். நம்பியாண்டார் நம்பி பாடிய பாடலும், சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய பாடலும் திருமூலர் வரலாற்றைக் குறிப்பாக உணர்த்துகின்றன. சிவத்தொண்டர் ஒருத்தர் கயிலை மலையில் வாழ்ந்து வந்தார். அவர் நந்தியம் பெருமானிடம் உபதேசம் பெற்று பொதிய மலைக்கு வந்தார். வந்தவர் தில்லையில் நடராசப் பெருமானை வணங்கியபின் அவ்வூருக்கு அருகில் உள்ள "சாத்தனூர்க்கு" வந்தார். அங்கு பசுக்கள், தம்மை

மேய்த்த இடையன் இறந்து விட்டமையால் அழுத வண்ணம் இருந்தன. அவற்றின் துன்பத்தைப் போக்க எண்ணிய அவர் 'பரகாயப் பிரவேசம்' என்ற சித்தியினால் 'மூலன்' என்ற ''இடையன்'' உடலில் புகுந்தார். பின்பு பசுக்கள் தம் தலைவன் எழுகையால் மகிழ்ந்தன. அவற்றை அவர் வீடுகளில் செலுத்திவிட்டு வந்து தம் உடலை வைத்த இடத்தில் தேடினார். அது கிடைக்கவில்லை. ஆதலால், அது இறைவன் அருட்செயல் என எண்ணித் திருவாவடுதுறைக்கு வந்தார். அங்குக் கோயிலின் பிரகாரத்தில் இருந்த அரசமரம் ஒன்றின் கீழ் அமர்ந்து தவம் செய்தார். மூவாயிரம் ஆண்டு தவம் செய்தார் என்றும், ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம் மூவாயிரம் பாடல்களைப்பாடியருளினார் என்றும், மூவாயிரம் பாடல்களைக் கொண்ட அந்நூலே '**திருமந்திரம்.**' என்றும் போற்றப்படுகிறது. இவரது பெயர் 'சுந்தரன்' என்பர். '**நாதன்**' என்று நந்தியம் பெருமானால் பெயர் சூட்டப்பட்டவர். இவர் நந்தியம் பெருமானிடம் உபதேசம் பெற்ற போது உடனிருந்தவர் சனகர், சந்திரர், சனாதனர், சனற்குமரர், பதஞ்சலி, வியாக்கிர பரதர் என்பவர்கள் ஆவார்கள். ''திருமூலர்'', ''ஆதி சித்தர்'' என்றும், ''யோகச்சித்தர்'' என்றும் அழைக்கப்படுகிறார்.

**திருமந்திரத்தின் அமைப்பு:**

திருமூலர் திருவாவடுதுறையில் இருந்த ஓர் அரச மரத்தின் கீழ் அமர்ந்தார், மூவாயிரம் ஆண்டு தவம் செய்தார். ஆண்டுக்கு ஒரு பாடலை இயற்றினார் என்பது செவி வழிச் செய்தி ஆகும். பெரிய புராணத்திலும் இச்செய்தியே குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி.18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ''சுந்தரமூர்த்திநாயனார்'' பாடிய திருத்தொண்டத் தொகையில் ''நம்பிரான் திருமூலர்'' எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஆதலால் இவரது காலம் கி.பி.8 ஆம் நூற்றாண்டுக்கு முந்தையது. இந்நூல் முழுவதும் கலிவிருத்தப்பாவால் பாடப்பட்டுள்ளது.

**தந்திரங்கள்:**

திருமந்திரத்தில் பாயிரமும், ஒன்பது தந்திரங்களும் உள்ளன. தந்திரம் என்பது இந்நூலைப் பொறுத்த வரையில் நூலின் உட்பிரிவு ஆகும். முதல் நான்கு தந்திரங்கள் சிவஞானத்தைப் பெறும் வழியையும், ஐந்தாம் தந்திரம் சைவச் சித்தாந்த உண்மையையும், ஆறு முதல் ஒன்பது தந்திரங்கள் சிவஞானத்தால் பெறும் நன்மை பற்றியும் கூறுகின்றது.

**முதல் தந்திரம்:**

உபதேசம் முதலாக கள்ளுண்ணாமை ஈராக மொத்தம் 24 பிரிவுகளைக் கொண்டுள்ளது. இது அறத்தை அடிப்படையாகக் கொண்டது. முப்பொருள் உண்மையை உணர்த்துவது. அதுதான் பதி, பசு, பாசம் என்பவை. திருக்குறள் கருத்துக்கள் இப்பகுதியில் விரிவாக விளக்கப்படுதல் நூலின் பொதுமைத் தன்மையை விளக்குகிறது.

**2-ம் தந்திரம்:**

அகத்தியம் முதல் பெரியோரைத் துணைக்கோடல் இறுதியாக 25 பிரிவுகளைக் கொண்டது. சிவபெருமானாம் செம்பொருள், மெய்ப்பொருள் ஆகும். சிவபெருமானை அடைய பிறரை துணையாகக் கொள்ளுதல், உலக அழிவையும் அதனை நிகழ்த்தும் சிவபெருமான் செயலும் பின்பு படைத்துக் காத்து அழிக்கும் செயலை பற்றியும் இத்தந்திரத்தில் காணமுடிகிறது.

**3-ஆம் தந்திரம்:**

அட்டங்க யோகம் முதல் சந்திர யோகம் வரை 21 பகுதிகளைக் கொண்டது. இமயம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, அட்டாங்க யோகப் பேறு இப்படி அட்டாங்க சித்தி போன்றவற்றை பற்றி கூறுகின்றது.

**4-ஆம் தந்திரம்:**

அசபை முதலாக நவகாக்ரி சக்கரம் வரை 13 பிரிவுகளைக் கொண்டது. அசபை என்பது எழுத்து. இதனுள் திருவம்பலச் சக்கரம் பற்றிப் பேசப் படுகின்றது. இது மற்றச் சக்கரங்களுக்குத் தலைமை சான்றது. திருவம்பலச் சக்கரத்துத் திருமந்திரம் 'சிவாயநம' என்ற ஐந்தெழுத்தாகும். அதுவே ‘‘ஆதி மந்திரம்.‘‘ அச்சக்கரத்தின் வழிபாடும் இதில் பேசப்படுகின்றது.

**5-ஆம் தந்திரம்:**

இது சுத்த சைவம் முதல், உட்சமயம் ஈறாக 20 பிரிவுகளைக் கொண்டது. சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், சரியை, கிரியை, யோகம், ஞானம், சன்மார்க்கம் முதலியன இப்பகுதியில் குறிப்பிடத்தக்கவை.

**6-ஆம் தந்திரம்:**

சிவகுரு தரிசம் முதல் பக்குவம் வரை 14 பகுதிகளை உடையது. சிவனை குருவாக கொள்ளுதல் அவனை அடைய வழிவகைகளை செய்யுதல். அதன்பின் துறவு மேற்கொண்டு தவம் செய்தல் போன்றவை பற்றி பேசப்படுகிறது.

**7-ஆம் தந்திரம்:**

ஆறு ஆதாரம் முதல் இதோப தேசம் வரை 38 பகுதிகளை உடையது. அண்ட லிங்கம். சதாசிவ லிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவ லிங்கம்என்பவை பற்றி ஆசிரியர் தெளிவாக விளக்குகின்றார்.

**8-ஆம் தந்திரம்:**

உடலில் பஞ்சபேதம் முதல் சோதனை இறுதியாய் 43 பகுதிகளைக் கொண்டது. உடம்பின் பாகுபாட்டைப் ‘‘பஞ்சபேதம்‘‘ என்கிறார். அது பருவுடல், நுண்ணுடல், போர்வையுடல், மீநுண்ணுடல், முதன்மையுடல் என ஐவகைப்படும். இதுவே அழியும் இயல்பு கொண்டவை. இவற்றில் தோன்றுவன பல்வேறு அவத்தைகள் இவற்றையெல்லாம் விளக்குகிறார் திருமூலர். இறுதியில் முக்தியும், பக்தியும் முக்தி நிலையும் ஆகியவற்றின் விளக்கம் குறிப்பிடத்தக்கவை.

**9-ஆம் தந்திரம்:**

குருமட தரிசனம் முதல் சர்வ வியாபி வரை 22 பகுதிகளைக் கொண்டது. குரு என்பது ஒளி. மடம் என்பது இடம். எனவே குருமட திரிசனம் என்பது ஒளி விளங்கும் இடத்தைக் குறிக்கும். இவ்வொளி கண்டவர் அடையும் பயன் இங்குக் கூறப்படுகிறது.

**அறம்:**

‘‘அறம் என்பது நீதி, கடமை, தருமம் என்பன பல பொருள் குறிக்கும் ஒரு சொல். அறம் என்ற சொல்லுக்கு எட்டு வகையான பொருள்களைத் தமிழ்ப் பேரகராதி கூறுகின்றனது.’’ [1]

அறம் என்பது அறுத்தல், வழியை உண்டாக்கு, துண்டி, வேறுபடுத்து என்று பலவகைப் பொருள்கள் கூறப்படுகின்றன. அம் என்ற தொழிற்பெயர் விகுதி அறு என்பதோடு சேர்ந்து அறம் என்ற சொல் உண்டாயிற்று எனலாம். மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே ‘‘அறம்‘‘ எனப்படும்.

**இல்லற அறம்:**

மனையாளோடு கூடி வாழும் இல்லற வாழ்வே இல்லறம் ஆகும். இல்லறத்தில் வாழ்பவன் ஏனைய பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய மூவர்களுக்கும் உதவி செய்பவன் ஆவான். ஆதரவற்றவர்க்கும், ஏழைகட்கும் இறந்தவர்க்கும் இல்வாழ்பவனே துணையாவான். பிதிரா, தெய்வம், விருந்து, உறவினர், தான் என்ற ஐவரையும் காத்தல்

இல்லறத்தான் கடமை. நல்வழியே சம்பாதித்துப் பிறர்க்கும் உதவி உண்பவன் சந்நதி அழியாது, அன்பும், தருமமுமே இல்வாழ்க்கையின் இயல்பும் பயனும் ஆகும் என்று திருவள்ளுவர் திருக்குறளில் கூறுகிறார்.

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்**
**பண்பும் பயனும் அது"** [2]

தரும நெறியிலே இல்லறத்தை நடத்தவதை விடச் சிறந்த வழி வேறு ஒன்றும் இல்லை. பிறரால் பழிக்கப்படாமல் இல்லறம் நடத்துவதே சிறந்தது உயர்ந்த தர்மம். இல்லறத்தை குற்றமின்றி நடத்துவோன் தேவருள் ஒருவனாக மதிக்கப்படுவான். மனைத்தக்க மாண்புடைய மனைவி சிவகலை அடிகளார்க்கு ஏற்ற துணையாக இல்லறத்தில் நின்றார். உறவினர் சூழ, விருந்தோம்பி இல்லறத்தில், மனை மாட்சியின் மங்கலமாக மனைத்தக்க மாண்புடையவராகப் புகழ்புரிந்து இல்லறம் நடத்தினார். தண்ணீரில் பயன்தாகம் நீக்கல்! மரத்தின் பயன் பூத்துக் காய்த்தல்! பெண்மையின் பயன் தாய்மை ஏற்றல் இப்பேறுவாய்க்கப் பெறாது முப்பத்தைந்து ஆண்டு வரை மகப்பேறில்லாத வருத்தம் அவரையும், அவரது இல்லத்தரசியாரையும் பெரிதும் வாட்டின. அடியாருக்கு வேண்டுவதை அளிக்க ஆண்டவன் முன் வந்தான். திருக்கனவில் திருவெண்காடருக்கு உணர்த்தியபடி, திருவிடைமருதூர் இறைவன் மருத வாணரே ஒரு மகவாகத் தோன்றினார். ஆதி சைவத் தம்பதியர் அவரை எடுத்து வந்து தர எடைக்கு எடை பொன்னும் மணியும் தந்து, ஏற்று அம்மகவை, மகனாகப் போற்றி வளர்க்கிறார். மனைவியானவள் கணவனது செல்வத்துக்குத் தக்கவாறு செலவு செய்பவளே சிறந்த மனைவியாவாள். மனைவியிடம் நற்குணம் இல்லாவிட்டால் அக்குடும்பத்துக்குப் பெருமையில்லை.

**"இல்லது என் இல்லவன் மாண்பு ஆனால் உள்ளது என்**
**இல்லவாள் மாணாக் கடை"** [3]

சிறந்த நற்குணமுள்ள மனைவியே ஒருவனுக்கு சிறந்த செல்வம் ஆகும். ஒருவன் அடையும் செல்வங்களில் கற்புள்ள மனைவிளய சிறந்த செல்வம் ஆகும். கணவனை தெய்வமாகக் கொள்ளும் மனைவி மழையை பெய் என்றால் பெய்யும். பெண்கள் தம் கற்பைத் தாமே காத்துக் கொள்வது சிறந்தது. கணவனை வணங்கி வாழும் மனைவியர் தேவருலகில் தேவர்களால் போற்றப்படுவார்கள்.

**பிறன்மனை நயவாமை:**

திருமூலரும் திருமந்திரத்தில் பிறன் மனைவியை விரும்புபவர்கள் தேமாங்கனியை அறையில் புதைத்து வைத்தால் கெடும், அது போன்று பிறர் மனைவியை விரும்புவரின் மனைவி கெடுவாள். புளிய மரத்தில் ஏறி வருந்துவது போல் என்பது, பிறர் மனைவியை நயத்தால் வருத்தமே உண்டாகும் என்றும், பிறன் மனைவியைத் தழுவாதவர்கள் எல்லா நன்மைகளுக்கும் உரியவர்கள். பாவமே செய்பவர்களாயினும் பிறன் மனைவியை விரும்பாமல் வாழ்தல் நன்மையாகும் என்று கூறுகின்றார் இதனை,

**"திருத்தி வளர்த்துஓர் தேமாங் கனியை**
**அருத்தம் என்று எண்ணி அறையில் புதைத்துப்**
**பொருத்தம் இலாத புளிமாங்கொம்பு ஏறிக்**
**கருத்து அறி யாதவர் கால் அற்ற வாறே"** [4]

என்ற பாடலின் மூலம் பிறன் மனைவியை விரும்புபவர்கள் கெட்டு அழிவர் என்று கூறுகிறார்.

பிறர் மனைவியின் மீது ஆசை வைத்துக் கவர்தலைத் தவிர்த்தல் வேண்டும் என்னும் நீதி உரைத்தலாம். பிறன் மனைவியை விரும்புதல் நரகத்தில் சேர்க்கும் புண்ணியம், புகழ், நட்பு, பெருமை ஆகிய நான்கும் பிறன்மனை விரும்புபவர் பால் சேராது. அத்தகையோர் பகை, பழி, பாவம், அச்சம் ஆகிய துன்பங்களால் வதைப்பட்டு உலகில் வைக்கப்படுவார். பிறரின்

மனைவியை தேடி செல்பவர்கள் தீராத பேரிடரை அடைவர் என்று நாலடியரில் சமண முனிவர்கள் கூறுகின்றனர்.

**"அம்பல் அயல் எடுப்ப அஞ்சித் தமர் பரீஇ**
**வம்பலன் பெண் மரீஇ மைந்துற்று -நம்பும்**
**நிலைமைஇல் நெஞ்சத்தான் துப்புரவு பாம்பின்**
**தலை நக்கி யன்ன(து) உடைத்து"** [5]

அயலார் பழித்துப் பேசவும், அதனால் தமது உறவின்கள் தம்மைத் தடை செய்வர் என்று அச்சம் கொண்டு அயலெ ஒதுங்கி நின்று மாற்றான் மனைவியை விரும்பிச் சேர்ந்து களித்து மேவும் நற்பண்பில்லாதவனுடைய காம நுகர்ச்சியானது வழவழப்பான பாம்பின் தலையை நாவால் சுவைத்து இன்புற்ற தன்மையாகும். இத்தகைய காம நுகர்ச்சி எப்போதும் இடரை மட்டும் தரும் என்று நாலடியாரில் சுட்டப்படுகிறது. பணப்பலமும், உடல் பலமும் கொண்டோர் செய்யும் மிகப்பெரிய தவறு ஒழுக்கக் கேடான செயல்களாகும். இதில் முதன்மையானது பிறன் மனை நயத்தல். இது குடும்ப அமைதியையும், சமூக ஒழுக்கையும் சிதைக்கும். பிறன் மனைவியிடம் செல்லுபவர்கள் எப்போதுமே தீராத பழியையும், பாவத்தையும் மட்டுமே அடைவர் என்பதை,

**"எளிதுஎன இல்இறப்பான் எடுப்பதும், எஞ்ஞான்றும்**
**விளியாது நிற்கும் பழி "** [6]

என்று திருவள்ளுவர் தனது திருக்குறளில் வலியுறுத்தியுள்ளார்.

**காமம் கொள்ளாமை:**

கள்ளைக் காட்டிலும் நினைத்தாலே, கண்டாலே, கேட்டாலே மதியை மயக்கும் கள் ஒன்று உண்டு. அது தான் காமம். அது அறிவை மயங்கச் செய்து உடலையும், பொருளையும் ஒரு சேரப் போக்கிப் பின்னே நிலைகுலையச் செய்யும் தன்மை வாய்ந்தது. காம இச்சையின் காரணமாக மனிதன் சில நேரங்களில் விலங்கு நிலைக்கு உள்ளாகும் நிலையையும் காணலாம். அயலான் மனையாளை ஆசைப்படுவது இடர் பலவும் தரும். திருவள்ளுவர், பிறனில் விழையாமை என்னும் அதிகாரத்தில் இதனை விளக்கியுள்ளார்.

**"பெண்ணாகி வந்தொரு மாயப்பிசாகம்**
**பட்டப்பகலில் வெளிமயக்கே செய்யும் பாவையர் மேல்**
**இட்டதை நீ தவிப்பாய்"** [7]

என்று பட்டினத்தாரும் பெண்ணாசையால் எழும் காமத்தினின்று விடுபட இறைவனை வேண்டுகின்றனர்.

**கொல்லாமை:**

கொல்லாமை என்பது பிற உயிர்களைக் கொலை செய்யாதிருத்தல் வேண்டும். பிற அனைத்து உயிர்களிடமும் அன்பு காட்ட வேண்டும். அவ்வாறு இல்லாமல் அதனை துன்புறுத்தினால் நமக்கு பாவம் மட்டுமே சேரும். நமக்கு கிடைத்த உணவைப் பலருக்கும் பங்கிட்டுக்கொடுத்து உண்ணுவதே சிறந்த அறம். கொல்லாமை சிறந்தது. அதனை அடுத்து, பொய் பேசாமை நல்லது. எவ்வுயிரையும் கொல்லாமையே நல்ல நெறியாகும். கொல்லாமையாகிய தருமத்தை மறவாதவனே துறவிகளில் சிறந்தவன். கொலை செய்யாத விரதமுள்ளவன் நீடுழி வாழ்வான்.லையால் வரும் செல்வத்தை அறிஞர்கள் இழிவாகவே எண்ணுவர். கொலை செய்வோரை அறிவுள்ளோர் அற்பர்களாகவே எண்ணுவர். கொலை செய்தவர்கள் நோயினாலும் வறுமையினாலும் துன்புறுவார்கள். கொல்லாமையில் திருவள்ளுவர்,

**"தன்உயில் நீப்பினும் செய்யற்க, தான்பிறிது**
**இன்உயிர் நீக்கும் வினை "** [8]

ஒரு மனிதன் தன் உயிர் போகும் நிலையிலும் அவன் கொலை செய்யக் கூடாது. எவ்வுயிர் மீதும் கொலை செய்யும் எண்ணத்துடன் பழகாமல் அவர்களிடம் அன்புடன் நடந்துக்கொள்ள வேண்டும். திருமூலர் தனது திருமந்திரத்தில்,

**"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை**
**வல்லபுக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்**
**நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே ”** [9]

'கொல்' எனவும் குத்து' எனவும் கூறிய விலங்கை ஒத்த மக்களை இயமதூதர் வலிய கயிற்றால் கட்டி,'செல்' எனவும் நில்' எனவும் அதட்டித் தீப் பொருந்திய நரகத்தில் நெடுங்காலம் நிற்க எனவும் ஆணையிடுவார். உயிர் கொலையை வெறுத்த சித்தர்களும் கொல்லாமையைப் பற்றிய பாடல்களைப் பாடியுள்ளனர்.

***ஈகை அறம்:***

எவ்வகையான பிரதிபலனையும் எதிர்பாராமல் மனமுவந்து பிறர்க்குக் கொடுப்பதே ஈகை எனப்படும். செல்வச்செழிப்புடன் வாழ்கின்றவர்களுக்குப் பொருட்களை வாரி வழங்குதல் ஈகை ஆகாது. இல்லை என்று வரும் ஏழைகளுக்கும் பசியோடு வருவோர்க்கும் வறுமையில் வாடுவோர்க்கும் தக்க நேரத்தில் ஈந்து உள்ளன்புடன் உதவுவதே ஈகையாகும்.

***“ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் அப்பசியை***
***மாற்றுவார் ஆற்றலின் பின்”*** [10]

என்று ஈகையின் சிறப்பினை திருக்குறள் விளக்குகிறது. அறம் என்பது தமிழிலக்கியங்களில் “ஈகை“ என்றே கையாளப்பட்டுள்ளது. மணிமேகலையும் அறமானது இல்லாதவர்க்கு ஈவதே ஈகை என்று திட்டவட்டமாக வரையறுக்கின்றது. அறச்செயல்களைக்கொண்டு அருள் செய்வார்க்கு விண்ணாடாகிய சொர்க்கத்தை அடைவது எளிது என்று விளக்குகிறது. மேலும் இல்வாழ்வார் கடமையாகத் தாழ்ந்தவர்க்கு உணவு அளித்தால் புகழைப் பெறலாம் என்றுரைக்கின்றது. அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்பது வள்ளுவர் வாக்கு. அறம் செய்து கிடைப்பதே இன்பம், பிறருக்குக் கொடுத்து வாழ்வது உலகில் உயர்ந்த இன்பமாகக் கருதப்பெறும். பிற உயிர்களை நேயத்துடன் நோக்குவது உயர் பண்பு ஆகும். இதனை திருமூலர்,

***"யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை***
***யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை***
***யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி***
***யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே" 12***

என்கிறார். பிற உயிர்களின் பசி போக்கலே சிறந்த அறமாகும். பிற உயிர்கள் மனம் மகிழும்படி நடப்பதே உயிர் அறமாகும். அறம் செய்வதற்கு அவர், இவர் என்று வேறுபாடு கருதாது நம்மை நோக்கி வரும் விருந்தினர் யாவருக்கும் உணவிட்டு பின் நாம் உண்ணுதல் வேண்டும் என்று அறிவுறுத்தும் போது,

***“ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்***
***பார்த்து இருந்து உண்மின் பழம்பொருள் போற்றனம்மின்***
***வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன் மின்***
***காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே”*** [13]

என்ற பாடல் வழி அறிவுறுத்துகிறார் திருமூலர். செல்வத்துப்பயனே ஈதல் இதனைத்தமிழர் இலக்கியங்கள் காலந்தோறும் வலியுறுத்தி வருகின்றன. சித்தர்களும் இக்கருத்தினை அழகாக விளக்குகிறார்கள். அதாவது பிறருக்கு உண்ண உணவும் உடுத்த உடையும் கொடுத்து வாழ்ந்தால்

மகிழ்ச்சியாக வாழலாம். அவ்வாறு செய்யத் தவறுபவர்கள் மக்கள் பிறவியில் தாழ்ந்தவர்கள் ஆவார்கள் என்கிறார் திருமூலர்,

**“கெடுவதும் ஆவதும் கேடுஇல் புகழோன்**
**நடு அல்ல செய்து இன்பம் நாடவும் ஒட்டான்**
**இடுவதும் ஈவதும் எண்ணு மின் இன்பம்**
**படுவது செய்யின் பசு அது ஆமே”** [14]

உணவும் உடையும் வாழ்க்கையின் அவசியம். எனவே அதை நிறைவு செய்பவனே உண்மையான மனிதன் என்பதைத் தெளிவுப் படுத்துகிறது. இறைவனுக்குக் கொடுக்கும் பொருள் மனிதர்களைச் சென்றடை வதில்லை. ஆனால் மனிதர்களுக்குக் கொடுக்கும் பொருள் இறைவனைச் சென்றடையும் என்ற மனித நேய கருத்தை திருமூலர்,

**“படமாடக் கோயில் பரமற்கு ஒன்று ஈயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின்**
**படமாடக் கோயில் பரமற்கு அது ஆமே”** [15]

என்ற பாடல் மூலம் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற சிந்தனை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

**திருமூலரின் தானத்தின் சிறப்பு:**

மனிதன் வாழ்வியல் செய்யும் செயல்களால் மிகவும் சிறந்த செயலாக உள்ளது தானச் சிறப்பாகும். தானம் கொடுப்பவர்களுக்கும் அதனை பெறுபவர்களும் மகிழ்ச்சி அடைவார்கள். அதற்கான புண்ணியத்தையும் அடைவர் என்று சான்றோர்கள் கூறுவர். இவ்வாறு தானம் செய்தலால் உலக நலம் தழைக்கும் என்று கூறுவார். ஈகைக்குணம் உடையவர் இம்மையில் மகிழ்வும், மறுமையில் முத்தியின்பமும் அடைவர் என்பதாம். பொருள் உள்ள போதே தருமம் செய்து புண்ணியத்தை அடைய வேண்டும். தானத்திலே சிறந்த தானம் அன்ன தானம் என்று நாலடியாரில் சமணமுனிவர்கள் கூறுகின்றனர்.

**“இம்மி யரிசித் துணையானும் வைகலும்**
**நும்மில் இயைவ கொடுத்துண்மின் - உம்மைக்**
**கொடாஅ தவர் என்பர் குண்டு நீர் வைத்து**
**அடாஅ அடுப்பின் அவர்”** [16]

இம்மியளவு அரிசிரியானாலும் உம்மை அடைந்தவர்கது நாள்தோறும் கொடுத்து அதற்கு பின்பு நாம் உணவு உட்கொள்ள வேண்டும். முப்பிறவியில் கொடுத்து உதவாதவர்கள் இப்பிறவியில் வறியவராக உள்ளனர்கள் என சான்றோர்கள் கூறுகின்றனர். மழையைப் போல் அனைவருக்கும் கொடுத்து உதவும் குணம் படைத்தவராக வாழ வேண்டும் என்பதை திருமூலர்,

**“ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்**
**பார்த்து இருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கை உடையர் விரைந்து ஒல்லை உண்ணன்பின்**
**காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே” 17**

எவரோயினும் அவர்க்குக் கொடுங்கள், அவர் உயர்ந்தோர் “தாழ்ந்தோர்' என எண்ணாதீர்கள். விருந்தை எதிர்பார்த்து அவருடன் கூடி உண்ணுங்கள், காக்கை உண்ணும் போது மற்ற காக்கைகளையும் அழைத்து உண்ணுகின்றது போல் எல்லாறுக்கும் கொடுத்து உதவ வேண்டும்.

**முடிவுரை:**

ஒருவன் தான் அனுபவிக்கும் இன்னலுக்கும் இன்பத்திற்கும் அவன் செய்யும் செயல்களே காரணமாக அமைகின்றன. எனவே நல்வினைச் செய்தால் நன்மைக் கிட்டும் என்றும், நாம் வாழ்கின்ற காலத்தில் நன்மை தரும் அறச்செயல்களைப் பிறருக்குச் செய்ய வேண்டும் என்று கூறுகின்றார். பெண்ணாசையில் சிக்கி தவிக்கும் புத்தி இல்லாத ஆண்கள் பெண்ணாசையை விடுத்து இறைவனின் அருள் வடிவத்தை காண வேண்டும் என்றும், பெண்ணை தாயாகவும் போற்ற வேண்டும். இறைவனுக்குக் கொடுக்கும் பொருள் மனிதர்களைச் சென்றடைவதில்லை. ஆனால் மனிதர்களுக்குக் கொடுக்கும் பொருள் இறைவனைச் சென்றடையும் என்று திருமூலர் கூறுகிறார். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது

**அடிக்குறிப்பு:**

1. *தமிழ் லெக்சிகன் பல்கலைக்கழகம், சென்னை,ப.30*
2. *திருமந்திரம்,பா.250*
3. *திருக்குறள்,55*
4. *திருமந்திரம்,பா.,63*
5. *கொங்கணச்சித்தர், பா.94*
6. *குறள், 155*
7. *திருமந்திரம்,பா.202*
8. *குறள் ,337*
9. *திருமந்திரம்.198*
10. *மேலது ,241*
11. *திருக்குறள்,225*
12. *சிறுபஞ்சமூலம்,பா.22*
13. *மேலது, பா.6*
14. *திருமந்திரம்,பா.252*
15. *மேலது, .241*
16. *திருமந்திரம்,பா.268*

**துணை நூற் பட்டியல்:**

*1.திருமந்திரம் மூலமும் தெளிவுரையும் - உரையாசிரியர்,அ.மாணிக்கம் வர்த்தமானன் பதிப்பகம், தொகுதி -1,2 தியாகராய நகர், சென்னை -17*

*2. நெஞ்சைக் கவரும் நீதிநூல்கள் - கருப்பூர் மு.அண்ணாமலை, இலக்குமிநிலையம், இராயப்பேட்டை, சென்னை -14.*

*3. அரசுமணிபுலவர்.(உ.ஆ) - திருக்குறள் எளிய உரை, அருணோதயம் பதிப்பு — 2013, சென்னை,*

***Sub- Catalogue***

1. *A. Manickam (Urai aasiriyar)* - *Thiru mandhiram, Vol,1&2இ Varthamanan publishing, Chennai -17.*

2. *Karupoor M.Annamalai* - *Nenjai kavarum needhi noolgal, Lakshmi nilayam, Rayappettai, Chennai — 14.*

3. *Arasumani pulavar (Urai Assiriyar)* -*Thirukkural Urai, Arunodhayam publishing, Chennai . F.E.2003.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com